
பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 21 | வியாழக்கிழமை | 04.04.2024 | அதிர்வு 247

## தமிழ் பொதுவேட்பாளரால் தமிழ் மக்களின் வாக்குகள் ஒருபோதும் பிளவுபடாதாம்



**விக்கி சொல்கின்றார்**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர்

06

### கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து

# நீண்ட நேர விசாரணைகளின் பின்னர் முருகன், பயஸ், ஜெயக்குமார் விடுவிப்பு




(எஸ்.நிதர்ஷன்)

இந்தியாவில் இருந்து நேற்று இலங்கை திரும்பிய முருகன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய மூவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நீண்ட நேர விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

06

## எந்த அரசியல் கட்சியினருடனும் பகிரங்க விவாதத்துக்குத் தயார்!

### முல்லைத்தீவில் சஜித் தெரிவிப்பு



இலங்கை எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில், எந்தவொரு அரசியல் கட்சியுடனும் பகிரங்க விவாதத்துக்குத் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 140 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், முல்லைத்தீவு,

07




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளுக்கு எதிராக அதன் உறுப்பினர் ஒருவர் தொடுத்த வழக்கின் தவணை நாளை திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில்.

இந்த வழக்கு நாளைய தவணையோடு சுமுகமாக தீர்வுக்கு வருமா என்பதுதான் பலரினதும் கேள்வியாகவும் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்த்தால் உடனடியாகக் கட்சியின் தேசிய மாநாட்டைக் கூட்டி, தமிழரசின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்கக் காத்திருக்கின்றார் சிறீதரன் எம்.பி.

அதைத்தான் முன்னர்

06



# தற்போதைய வேலைத்திட்டத்தை மாற்றினால் நாடு பெரும் நெருக்கடியைச் சந்திக்க நேரிடும்

## அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு



"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் தற்போதைய வேலைத்திட்டத்தில் கடுகளவு மாற்றம் செய்யப்பட்டாலும் நாடு மீண்டும் பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்படும்."

– இவ்வாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த காலத்தில் வீழ்ச்சியடைந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பும் சவாலான பணியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டதன் பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியை பெறுவதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டது. பின்னர் கடன் மறுசீரமைப்பு குறித்தும் ஆராயப்பட்டது. அதனால் தற்போது நாடு சுமூகமான பொருளாதார நிலையை அடைந்துள்ளது. இந்த நிலையை விருப்பமின்றியேனும் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அந்த நேரத்தில் டொலரின் பெறுமதி 400 ரூபாவிற்கு கிட்டியதாக காணப்பட்டது. ஆனால் இன்றளவில் டொலரின் பெறுமதி 300 ரூபாவை விடவும் குறைந்துள்ளது. அதனால் இறக்குமதிப் பொருள்களுக்கான கொடுப்பனவுகளும் குறைவடைந்திருக்கிறது.

மேலும், பூஜ்ஜியமாகக் குறைந்து போயிருந்த நாட்டின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு இன்று 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. நிலுவைத் தொகையின் நடப்புக் கணக்கில் உபரி ஏற்பட்டுள்ளது. அதன்படி, ரூபாயின் பெறுமதி அதிகரித்திருக்கிறது. பல பொருள்களின் விலை குறைந்துள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக அரச வரவு – செலவுத் திட்டத்தின் முதன்மைக் கணக்கில் உபரி ஏற்பட்டுள்ளது.

மேலும், வட்டி விகிதம் குறைந்துள்ளது. 70 வீதமாக இருந்த பணவீக்கம் 6 வீதமாக குறைந்துள்ளது. அதனால் பொருள்களின் விலை உயர்வு விகிதமும் குறைந்துள்ளது. அதனால் நாடு பாதகமான நிலையிலிருந்து மீண்டுள்ளது என்றே கூற வேண்டும்.

தற்போதைய புதிய மத்திய வங்கிச் சட்டத்தின்படி, எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும், பணம் அச்சிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. இதன் ஊடாக நிதி நிர்வாகத்தில் ஒழுக்கத்தைப் பேண முடிந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் தற்போதைய வேலைத்திட்டத்தில் கடுகளவு மாற்றம் செய்யப்பட்டாலும் நாடு மீண்டும் பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்படும். அத்தோடு நாட்டின் எதிர்காலமும் கேள்விக்குரியாகிவிடும்.

நாட்டில் வறுமை அதிகரித்துள்ளதாக பல்வேறு தகவல்கள் வெளியாகினாலும், பொருளாதார வளர்ச்சி மறை பெறுமானம் 08 ஆக பதிவாகிய வங்குரோத்து நாட்டில் வறுமை புதிதல்ல, வறுமை நீங்க நாட்டின் வருமானம் அதிகரித்து, பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டியது அவசியமாகும். விவசாயம், தொழில் மற்றும் சேவைத் துறைகளில் வளர்ச்சி ஏற்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சி விகிதம் அதிகரிக்கும் போது, தனிநபர் வருமானம் அதிகரித்து வறுமை குன்றும்.

சர்வதேச நாணய நிதியத்தின் தற்போதைய திட்டத்தில், கடந்த கால நெருக்கடியின் போது பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட வறிய மக்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த வறுமைக்கு ஈடுகொடுக்கும் முகமாகவே, சமூர்த்தி தொகையை விடவும் மூன்று மடங்கு அதிகமான நிவாரணத்தை வழங்கும் அஸ்வெசும சமூக பாதுகாப்பு வேலைத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த நிலுவையில் இருந்த 361 பில்லியன் ரூபாவை செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதோடு, மூன்று மாதங்களுக்குள் புதிய ஒப்பந்தங்களுக்கான கொடுப்பனவுகளும் முழுமையாக வழங்கப்படும்.

இவ்வாறான நிதி ஒழுக்கத்தை பேணுவதாக சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜூன் மாதத்திற்குள், இருதரப்பு கடன் வழங்குநர்களுடனான இறுதி ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படும். அதன் பிறகு, தடைபட்ட அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் மீண்டும் ஆரம்பிக்கப்படும்." – என்றார்.

# நாட்டின் பொருளாதாரம் வலுவுற்று பலன் கொடுக்க ஆரம்பித்துள்ளது!

## ஷெஹான் சேமசிங்க கூறுகிறார்



"இலங்கையின் பொருளாதார சீர்திருத்த முயற்சிகளினால் ஏற்பட்ட குறுகிய கால பாதிப்பில் இருந்து ஓரளவுக்கு விடுபட்டுள்ளது."

– இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"அரசாங்கம் எடுத்த தீர்மானங்களால் பொருளாதாரம் வலுவடைந்து பலன் கொடுக்க ஆரம்பித்துள்ளது.

ஆரம்பத்தில் மக்களிடம் இருந்து பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் விமர்சனங்கள் எழுந்தன.

அரசாங்கம் அந்த சவாலை ஏற்றுக்கொண்டதால், பல்வேறு அரசியல் கட்சிகள் அரசாங்கத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்த முயற்சி செய்தன. எவ்வாறாயினும், பொருளாதாரம் வலுவடைந்து வருகிறது.

பொருளாதாரம் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகள் தற்போது பலனளிக்க ஆரம்பித்துள்ளன." – என்றார்.





# பொருளாதாரம் வலுவடைந்திருக்கும் நிலையில் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“மூன்று வருடங்களின் பின்னர் 2024 ஆம் ஆண்டில் 4,000 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. நாட்டின் பொருளாதாரம் மேலும் வலுவடையும் பட்சத்தில், அடுத்த வருடமும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேலதிக நிதி ஒதுக்கப்படும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற மேல் மாகாண பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“நீங்கள் ஒரு வகுப்பறையை மாத்திரம் பொறுப்பேற்கவில்லை. அந்த வகுப்பறையில் உள்ள மாணவர்களின் எதிர்காலத்தைத்தான் நீங்கள் பொறுப்பேற்கிறீர்கள். 05 வயது முதல் 19 வயது வரை உள்ள மாணவர்கள் உங்களுடன்தான் தமது நேரத்தை செலவிடுகிறார்கள்.

அதனால்தான் அவர்கள் வீட்டில் இருந்து பெறும் வழிகாட்டுதலைப் போன்றே பாடசாலையிலிருந்து அவர்கள் பெறும் வழிகாட்டுதலும் மிகவும் முக்கியமானது. அந்தப் பொறுப்பை நீங்கள் நிறைவேற்ற வேண்டும். மாணவர்களுக்கு பாட அறிவை மட்டும் கொடுக்க வேண்டியதில்லை. இந்த மாணவர்களின் வாழ்க்கையை நீங்கள்தான் வடிவமைக்க வேண்டும்.

இன்று, இணையத்தில் பாட அறிவை பெறலாம். ஆனால் மாணவர்களின் குணாதிசயத்தை கட்டியெழுப்ப இணையத்தால் முடியாது. நம் அனைவரின் வாழ்க்கையையும் கட்டியெழுப்புவதில் பெற்றோரிடமிருந்து பெற்ற வழிகாட்டுதலைப் போன்றே ஆசிரியர்களின் வழிகாட்டுதல் மிகவும் முக்கியமானது. அதனால்தான் ஆசிரியர் தொழில் உயர் தொழிலாகக் கருதப்படுகிறது. அந்த மரியாதையை பாதுகாக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஆசிரியர்களாகிய உங்களது அறிவு மிகவும் முக்கியமானது. இன்று நாளுக்கு நாள் அறிவைப் புதுப்பித்துக்கொள்ளும் ஒரு சமூகம் உள்ளது. எனவே, கடந்த காலங்களில் பாட அறிவை அதிகரிக்காமல் ஆசிரியர்கள் பணியாற்றுவது சாத்தியமாக இருந்த போதிலும், இன்று அவர்களால் அவ்வாறு செய்ய முடியாது. உங்கள் அறிவு இன்னும் 10, 20 ஆண்டுகளில் போதுமானதாக இருக்குமா என்று சிந்தியுங்கள். எனவே, ஆசிரியர்கள் பாட அறிவை மேம்படுத்த எப்போதும் பாடுபட வேண்டும்.

இன்று 2,300 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படுகிறது. மேலும் 700 நியமனங்கள் வழங்கப்பட உள்ளன. வெற்றிடங்களுக்கு ஏற்ப மேலும் 1,000 ஆசிரியர்களை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய இந்த வருடத்தில் சுமார் 4,000 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்குப் பின்னரே இந்த நியமனங்களை வழங்க முடிந்துள்ளது. பொருளாதார வீழ்ச்சி மற்றும் கோவிட் தொற்றுநோய் காரணமாக இந்த நியமனங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டிருந்தன.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் மறைப்பெறுமானத்தை எட்டியது. ஆனால் அரசாங்கம் மேற்கொண்ட சரியான பொருளாதார முகாமைத்துவத்தினால் ரூபாவின் பெறுமதி இன்று அதிகரித்துள்ளது. அதன்படி, பொருளாதாரம் வலுப்பெற்றுள்ளது. எனவே, இன்று இந்த நியமனங்களை வழங்குவதற்கான வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது.

கடந்த ஆண்டு டொலருக்கு நிகராக ரூபாவின் பெறுமதி 370 ஆக இருந்தது. இன்று டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி 300 ஆக உள்ளது, எதிர்காலத்தில் அதை 280 ரூபாவாகக் குறைக்க எதிர்பார்க்கிறோம். அப்போது அரசாங்க செயற்பாடுகளுக்கான பணத்தைத் தேட வேண்டியுள்ளது. இன்று நாம் கடினமான பாதையில் சென்றாலும் எதிர்காலத்தில் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண முடியும். இதன் போது அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிக்க முடிந்தது.

அத்துடன், சிங்களத் தமிழ்ப் புத்தாண்டுக் காலத்தில் நெல்லுக்கு சிறந்த விலையை வழங்க முடிந்துள்ளது.” – என்றார்.










# உகந்த முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கி பொருளாதாரத்தை வலுப்படுத்த நடவடிக்கை

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு





"நாட்டிற்கு உகந்த போட்டித்தன்மையுள்ள முதலீட்டு வாய்ப்புகளை ஏற்படுத்தி வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலீட்டுச் சபையின் விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பு பியகமவில் இருந்து முதலீட்டு வலயத்தை உருவாக்குவது சாத்தியமற்றது எனக் கூறி வெளியேறியது. ஆனால், பியகமவில் முதலீட்டு வலயத்தை உருவாக்க முடியும் என அன்றிலிருந்த முதலீட்டு சபையிலுள்ள பொறியியலாளர்கள் குறிப்பிட்டனர். மேலும் அவர்கள் பியகம முதலீட்டு வலயத்தை உருவாக்கினர்.

இந்த நாட்டில் முதலீட்டு வலயங்களின் ஆரம்பம் அப்படித்தான் நடந்தது. எமது நாட்டில் முதலீட்டு வலயங்களை நிர்மாணிப்பதில் பங்களித்த பலருக்கு நான் எனது நன்றியைத் தெரிவிக்க வேண்டும்.

இந்த இரண்டு முதலீட்டு வலயங்களிலும் புலிகளின் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. மேலும் ஜே.வி.பியின் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்த இரண்டு முதலீட்டு வலயங்களையும் பாதுகாக்க, உள்ளே நுழையும் மற்றும் வெளியேறும் அனைவரையும் பரிசோதிக்க வேண்டும் என்று பாதுகாப்புப் படையினர் கோரினர். எப்படியாவது அந்த அச்சுறுத்தல்களிலிருந்து நாங்கள் பாதுகாக்கப்பட்டோம். மேலும், இந்த முதலீட்டு சபைகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக கடினமான பொருளாதார சூழ்நிலையில் இருந்து பாதுகாக்கப்பட்டன.

ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ 200 ஆடைத் தொழிற்சாலைகளை அமைக்கத் தீர்மானித்தார். அவர் அதை 100 தொழிற்சாலைகளுடன்தான் ஆரம்பித்தார். ஆனால் அவற்றை இந்தப் பிராந்தியங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்த முடியவில்லை. எனவே, இந்தப் பொறுப்பு முதலீட்டு சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் மூலம் நாடு முழுவதும் ஆடைத் தொழிற்சாலைகள் கட்டப்பட்டன. 200 ஆடைத்தொழிற்சாலைகளை நிர்மாணித்தமை எமக்கு கிடைத்த மாபெரும் வெற்றி என்றே கூற வேண்டும்.

வாராந்தம் தொழிற்சாலைகளை திறந்தோம். அப்படித்தான் இந்த நாடு முன்னெறியது. புதிய தலைநகரையும் நாம் உருவாக்கினோம். மகாவலி திட்டம் உருவாக்கப்பட்டது. வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் மூலம் 15 வருடங்களில் நாடு முழுவதும் பல அபிவிருத்திப் பணிகளைச் செய்தோம்.

மிகவும் மோசமான காலகட்டத்தை கடந்து வந்துள்ளோம். நீங்கள் அனைவரும் அதற்கு முகங்கொடுத்தீர்கள். பொருளாதார ரீதியில் அவர்கள் அனைவரினதும் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்ப இந்த நேரத்தை நாம் பயன்படுத்த வேண்டும்.

எவ்வாறாயினும், இரண்டு வருடங்களுக்குள் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த எம்மால் முடிந்தது. அந்த நிலைமையை நாங்கள் தற்போது பேணி வருகிறோம். பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கு நாம் இனி மத்திய வங்கியைச் சார்ந்திருக்க மாட்டோம். அதற்காக நாம் சந்தையை நாடுவோம்.

அடுத்து, நமது பொருளாதாரத்தை அதிக போட்டி நிறைந்த ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக மாற்ற வேண்டும். இதைச் செய்ய உங்களுக்கு 10 முதல் 15 ஆண்டுகள் செல்லும். இதற்கிடையில், முதலீட்டு சபையின் தன்மையை பொருளாதார ஆணைக்குழுவாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

அதன் மூலம் முழு இலங்கையையும் உள்ளடக்கிய முதலீட்டு வலயத்தை உருவாக்குவோம். அதன் பிரகாரம் முதலீட்டாளரான நீங்கள் அனுமதிப்பத்திரம் பெற்ற உரிமையாளராக மாறுவீர்கள். இதன் ஊடாக உங்களுக்கென வலயமொன்றைப் பேண முடியும்.

தற்போது பியகம பிரதேசத்தில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது. திருகோணமலையில் மூவாயிரம் முதல் நான்காயிரம் ஏக்கர் காணி தேடப்படுகிறது. வடக்கில் மேலும் ஆயிரம் ஏக்கர் இருக்கிறது. அம்பாந்தோட்டையிலும் சுமார் மூவாயிரம் முதல் நான்காயிரம் ஏக்கர் காணி இருக்கிறது. இதனால்தான் உட்கட்டமைப்பு வசதி குறித்து நாம் கவனம் செலுத்துகிறோம்.

நாங்கள் இப்போது அதிக போட்டித்தன்மையான முதலீடுகளைப் பெறுவதில் கவனம் செலுத்தி வருகிறோம். பொருளாதாரத்தை அதிக போட்டித்தன்மை கொண்டதாக மாற்றவும், நாட்டை முதலீட்டுக்கு ஏற்றதாக மாற்றவும் முயன்று வருகிறோம்.

நாங்கள் முழு தொழிற் பயிற்சி முறையையும் மறுசீரமைக்க வேண்டும். அதற்காக தொழிற்பயிற்சி நிலையங்கள் படிப்படியாக ரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக தொழிற்கல்லூரிகள் தொடங்கப்படும்.

எனவே, மாணவர்கள் தங்கள் பாடசாலையிலிருந்து தொழிற்கல்லூரிக்கு மாறும்போதும், புதிய விடயப்பரப்பில் முன்னேறும்போதும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய மரியாதை இழக்கப்படுவதில்லை. புதிய கனிஷ்ட தொழில்நுட்ப நகரங்களை அமைப்பது குறித்தும் தற்போது ஆராயப்பட்டு வருகிறது. குறைந்தபட்சம் இதுபோன்ற மூன்று அல்லது நான்கு நகரங்களை உருவாக்கும் திட்டமிடப்பட்டுள்ளது." – என்றார்.







# ஆசிரியையால் தாக்கப்பட்டாராம் தரம் 2 மாணவன் ஆஸ்பத்திரியில்

## வவுனியா சுந்தரபுரம் பகுதி பாடசாலையில் சம்பவம்

(வவுனியா நிருபர்)

வவுனியா சுந்தரபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் இரண்டில் கல்வி பயிலும் மாணவன் மீது ஆசிரியர் கண்மூடித்தனமாக தாக்கியதில் மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்யகப்பட்டுள்ளான் என வைத்தியசாலைப் பொலிஸெ தெரிவித்தனர்.

நேற்றுப் பாடசாலை முடிந்து வீட்டிற்கு சென்ற சிறுவனின் முகத்திலும் தலையிலும் அடிகாயங்கள் காணப்பட்டமையை அடுத்து பெற்றோர் சிறுவனிடம் விசாரித்ததில் அவரது ஆசிரியை தாக்கினார் என சிறுவன் தெரிவித்துள்ளான்.

இதனை தொடர்ந்து சிறுவனின் தந்தை அந்த ஆசிரியருக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சிறுவனை தாக்கியதற்கான காரணம் என்ன மற்றும் காலிற்கு கீழ் அடித்து இருக்கலாமே என்றும் தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதில் அளித்த ஆசிரியை "உங்கள் மகனுக்கு அ, ஆ தெரியவில்லை. அதனாலேயே அடிக்க வேண்டி வந்தது. அடிக்கும் போது சிறுவன் அங்கும் இங்கும் ஓடியதால் முகத்தில் அடிபட்டுவிட்டது"" என்று கூறியமையுடன், மகனுக்கு அடிக்காமல் கொஞ்சுவதா எனவும் கேட்டுள்ளார்.

அத்துடன் இதனை கேள்வி கேட்கும் நீங்கள் நாளையுடன் பிள்ளையை வந்து கூட்டி சென்றுவிடுங்கள் என்று எந்தவிதக் குற்ற உணர்ச்சியும் இன்றி ஆசிரியர் பதில் அளித்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.



இதனை ஆட்சேபித்த பெற்றோர் சிறுவனை நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா பொதுவைத்தியசாலையில் கொண்டு சென்று அனுமதித்து சிகிச்சை பெற்று வருகின்றனர். சிறுவனின் நெற்றியில் காயமும் தலை மற்றும் கண் பாதிப்படைந்துள்ளதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக வைத்தியசாலை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விடயம் சட்ட வைத்திய அதிகாரியின் விசாரணைக்கும் உட்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புத்தாண்டுக் காலத்தில் விசேட ரயில் சேவைகள்

எதிர்வரும் தமிழ் - சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ரயில்வே திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து காலி, பெலியத்த, கண்டி, மாத்தறை, ஹட்டன் மற்றும் பதுளை ஆகிய பகுதிகளுக்கு விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.




# யாழில் மாணவர்களுக்குப் போதைப் பொருள் விற்று வந்த அறுவர் கும்பல் மடக்கப்பட்டது!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த ஆறுபேர் கொண்ட கும்பல் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலில், அவர்கள் யாழ் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து நடத்திய சுற்றிவளைப்பின்போதே போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த குருநகரை சேர்ந்த ஐவரும் யாழ்ப்பாணம் நாவாந்துறையைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 18,19,20,21 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. நீண்ட காலமாக ஒரு வலயமைப்பாக இயங்கி, பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதை மாத்திரைகளை விற்பனை செய்து வந்தவர்களில் இருவர் நேற்று சென் பற்றிக்ஸ் பாடசாலை அருகாமையில் வியாபாரத்தில் ஈடுபடும் பொழுது யாழ் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். யாழ் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து விசாரணையை மேற்கொண்ட பொழுது ஏனையோரும் மாட்டியுள்ளனர்.



இவர்களில் ஒருவர் போதைப்பொருள் வியாபாரம் செய்யும் பொழுது மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரும் யாழ் மாவட்ட குற்றதடுப்பு பிரிவினரும் இணைந்து விரட்டிய சமயம் நாவாந்துறை சந்தியில் ஓட்டோவைக் கை விட்டு ஓட முயன்றபோது

300 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டார்.

இவை தொடர்பில் மேலதிக விசாரனைகளை யாழ் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தொடக்கம் வலியுறுத்தி வரும் சுமந்திரன் எம்.பியும் எதிர்பார்க்கின்றார்.

ஆனால் அதற்கு உடனடிச் சாத்தியம் உண்டா என்பதுதான் இப்போதைய கேள்வி.

வழக்கின் ஏழு எதிராளிகளில் சுமந்திரன் தவிர்ந்த ஏனைய ஆறு பேரும், வழக்காளி சுட்டிக்காட்டிய தவறுகளை ஒப்புக் கொண்டு, கட்சிக் கூட்டங்களை ஆரம்பத்தில் இருந்து மீள நடத்துவதற்கு நீதிமன்றத்தில் இசைந்துவிட்டனர்.

கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராஜா உட்பட கட்சி பிரமுகர்கள் அனைவருமே அப்படி வழக்காளியின் குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தில் ஏற்று ஒப்புக்கொண்டமை அவசரப்பட்ட முடிவு, தவறானது என்பதை இப்போது உணர்கின்றனர் எனத் தெரிகிறது.

எனவே வழக்காளிக்கு சுமந்திரன் தனித்து எதிராளியாக நின்று, சட்டப் பூட்டுப் போட்டு, கட்சியின் செயற்பாட்டைச் சரியென நீதிமன்றம் கூறத் தக்கவிதத்தில் கட்சியை வெற்றிகரமாக மீட்டெடுக்க வேண்டும் என்பது கட்சி பிரமுகர்கள் எல்லோரினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

சுமந்திரனும் அதற்கு இசைவு தெரிவித்து, கட்சிக் கூட்டத்தில் வாக்குறுதி அளித்தும் இருக்கின்றார் என அறிய வந்தது.

கட்சி நடத்திய பொதுக்குழு கூட்டம் யாப்பை மீறியது அல்ல என்ற நிலைப்பாட்டை கடந்த வழக்குத் தவணைக்குப் பின்னர் மாவை சேனாதிராஜா கூட வெளியில் பகிரங்கமாக தெரிவித்திருக்கின்றார்.

ஆனால், நீதிமன்றத்தில் கடந்த தவணையின் போது பொதுக்குழு கூட்டம் உட்பட எல்லாமுமே யாப்பின்படி நடக்கவில்லை என்று அவரும் சேர்ந்து நீதிமன்றத்தில் எழுதிய ஒப்பமிட்டு விட்டு வந்து விட்டனர்.

இந்தத் தவறுகள் எல்லாவற்றையும்தமது நிலைப்பாட்டினாலும், சட்ட வாதத்தினாலும் சமாளித்து, கட்சி தவறு விடவில்லை என்ற நிலைப்பாட்டை நீதிமன்றத்தில் சுமந்திரன் நிலை நிறுத்த வேண்டும்.

அப்படிச் செய்வேன் என்று கட்சிக்கு வாக்குறுதி அளித்துள்ள சுமந்திரன், அதற்காக என்ன வாதத்தை நாளை முன்வைக்கப் போகின்றார் என்பது தெரியவில்லை. அது குறித்துக் கேட்டால் நேரடியாகப் பதில் தருகின்றார் அல்லர் அவர். ஆனால் சட்டவாதம் தொடர்பில் வலிமையான பிளான் ஒன்று அவரிடம் இருப்பதாக நெருங்கிய உதவியாளர்கள் மூலம் அறிய வந்தது.

ஆனால், அந்த விடயத்தை நாளைய தவணையுடன் அவரால் ஒப்பேற்றி முடிக்கலாம் என்று நான் நம்பவில்லை. எப்படியும் வழக்கு இன்னும் ஓரிரண்டு தவணைகள் இழுபட்டே முடிவுக்கு வரும் எனத் தோன்றுகின்றது.

குறுகிய காலத் தவணைகளுடன் வழக்கை விரைந்து முடிப்பது சுமந்திரனின் சாமர்த்தியத்தில் உள்ளது.

கட்சியின் பெயருக்குப் பங்கம் வராமல், வழக்கை தனது சட்ட வாதத்தின் மூலம் முறியடிப்பேன் என்று உறுதியளித்த சுமந்திரன், கட்சியின் மற்ற நிர்வாகிகள் தம்மை கைவிட்டு விட்ட பின்னரும் கூட அந்த உறுதியை நிலை நாட்டுவார் என்று நம்பலாம்.

ஆனால் அதை அவர் விரைந்து செய்ய வேண்டும். தவணை இழுபட விடாமல் செய்ய வேண்டும். அப்போதுதான் அவரைக் கட்சிக்குள் எதிர்த்தவர்களும் அவரை மதிக்கும் நிலை வரும்.

கட்சியின் பிற தலைவர்கள் தமது அவசரக் குடுக்கைத்தனத்தாலும், அவர்களுக்குக் கிட்டிய தவறான சட்ட ஆலோசனைகளின் படி செயல்பட்டமையால் ஏற்பட்ட நெருக்கடியினாலும், வழக்கு ஓரிரண்டு தவணைகள் தள்ளிப் போவது தவிர்க்க முடியாததுதான்.

ஆயினும், சுமந்திரன் கட்சியையும் வழக்கையும் வெல்ல வைப்பார், அந்த சட்ட வெற்றியின் மீது சிறீதரன் புதிய தலைவராக விரைவில் பதவியேற்பார் என்று சுமந்திரனின் ஜுனியர் ஒருவர் உறுதிப்படக் கூறினார். அப்படி நடந்தால் எல்லோருக்கும் நல்லதுதான்...!

## தமிழ் பொதுவேட்பாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களமிறக்கப்பட்டால், வஜிர அபேவர்தன கூறுவதுபோல் தமிழர்களின் வாக்குகள் பிளவுபடாது எனவும், மாறாக இதுவரை காலமும் பெரும்பான்மையின வேட்பாளர்களுக்கு வாக்களித்த அனைத்துத் தமிழர்களும் ஒன்றிணைந்து தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பர் எனவும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழர் தரப்பு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரொருவரைக் களமிறக்கி, தமிழர் வாக்குகளைப் பிரிக்கக்கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன கூறியிருப்பது பற்றி தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கும் விக்கினேஸ்வரன்,இதுகுறித்துமேலும்கூறியிருப்பதாவது:-

“எனது நண்பரான வஜிர அபேவர்தன ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளராவார். எனவே, பதவியில் உள்ள ஜனாதிபதியை வெற்றியடையச் செய்வதற்கு அவரால் வேறு எதைக் கூற முடியும்? ஆனால், அவர் தமிழர்கள் என்ற கோணத்திலிருந்து நாம் முகங்கொடுக்கும் பிரச்சினையைப் பார்த்தால், இவ்வாறு கூறமாட்டார்.

தமிழர்களாகிய நாம் இதுவரையில் பெரும்பான்மையின சமூகத்தைச் சேர்ந்த வேட்பாளருக்கே வாக்களித்திருக்கின்றோம். அவர்கள் அனைவரும் எமது அரசியல் பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவதாக வாக்குறுதியளித்தனர்.

ஆனால்,தேர்தல்முடிவடைந்ததன்பின்னர் அவர்களுக்கு எம்மைத் தெரியவே இல்லை. அவர்கள் வெகு இலகுவாக எம்மைப் புறக்கணித்துவிட்டனர். நாங்கள் 1956 ஆம் ஆண்டு எங்கே இருந்தோமோ,இப்போதும்அங்கேயேஇருக்கின்றோம். வடக்கு, கிழக்கு தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு வழங்கப்படவில்லை.

இலங்கையில் இன்றளவிலே இனத்துவப்போக்கு நிலவுகின்றது. சிங்களவர்களால் தெரிவுசெய்யப்படும் சிங்களவர்களுக்கான சிங்கள அரசே இயங்குகின்றது.

தமிழர்கள் இந்த மண்ணில், அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கில் 3000 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வருகின்றனர் என்ற உண்மை சிங்களவர்களால் ஏற்கப்படவில்லை. பிரித்தானியர்கள் நிர்வாகத்தேவைகளுக்காக நாட்டை ஒன்றிணைத்தனர்.

இருப்பினும் அவர்கள் வெளியேறும் போது எமக்கு சமஷ்டி அரசமைப்பை வழங்கியிருக்கவேண்டும். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வியை நிறைவு செய்துகொண்டு 1926 ஆம் ஆண்டு நாடு திரும்பிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க சமஷ்டி அரசமைப்பையே வலியுறுத்தினார். கண்டிய சிங்களவர்கள் டொனமூர் ஆணைக்குழுவிடம் சமஷ்டி அரசமைப்பையே கோரினர். ஏனெனில் கண்டிய சிங்களவர்கள் தம்மைத்தாமே ஆளுகின்ற சுயநிர்ணய உரிமைக்கான சட்டபூர்வ அதிகாரம் தமக்கு வேண்டுமெனக் கருதினர்.

இவ்வாறானதொரு பின்னிணயில் வடக்கு, கிழக்குவாழ் தமிழ்பேசும் மக்களின் சார்பில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறங்கினால் அவர் ஜனாதிபதியாகத் தெரிவாகமாட்டார் என்பது உண்மையே. தமிழ் பொதுவேட்பாளரொருவரைக் களமிறக்குவது தமிழர்களின் வாக்குகளைப் பிளவுபடுத்தும் என்ற தர்க்கம் முன்வைக்கப்படுகின்றது.

ஆனால், மிகப்பொருத்தமான தமிழ் வேட்பாளரொருவர் களமிறக்கப்பட்டால், தமிழ் மக்கள் அனைவரும் பெரும்பான்மையின வேட்பாளருக்கு வாக்களிப்பதற்குப் பதிலாக, அந்தத் தமிழ் பொது வேட்பாளருக்கே வாக்களிப்பார்கள். தமிழர்கள் மிக நீண்டகாலமாக ஏமாற்றப்பட்டிருக்கின்றார்கள். எனவே , இதுவரை காலமும் சிங்கள அரசியல்வாதிகளால் தமிழ் மக்கள் எவ்வாறு ஏமாற்றப்பட்டார்கள் என்பதை உலகுக்கு எடுத்துரைப்பதற்கு இது மிகச்சிறந்ததொரு சந்தர்ப்பமாகும். அதிகாரம் மிக்க இடத்திலிருந்து தமிழர்களின் பிரச்சினைகளை எடுத்துரைப்பதற்குத் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவது மிக முக்கியமானதாகும்.” – என்றார்.

## நீண்ட நேர விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு 33 ஆண்டுகள் வரை சிறையிலிருந்து கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டு திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முருகன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் நேற்று இலங்கையை வந்தடைந்தனர்.

மேற்படி மூவரும் திருச்சி சிறப்பு முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு 11.15 மணிக்கு சென்னைக்குப் பொலிஸ் வாகனம் மூலம் அழைத்து வரப்பட்டனர்.

இதன்படி நேற்று முற்பகல் 10 மணியளவில் சென்னை விமான நிலையத்திலிருந்து அவர்கள் இலங்கை நோக்கிப் பயணித்தனர். மூவரும் முற்பகல் 11.30 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்களுக்கு இலங்கைக்குச் செல்வதற்கு மாத்திரமே இந்தியாவிலுள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகரகம் கடவுச்சீட்டு வழங்கியுள்ளது என்று சட்டத்தரணி புகழேந்தி பாண்டியன் தெரிவித்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து ஐந்தரை மணி நேர விசாரணைகளின் பின்னர் முருகன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய மூவரும் விடுவிக்கப்பட்டனர். அவர்களை விமான நிலைய வெளியேறும் வாசலில் வைத்து குடும்பஉறவினர்களும்,அரசியல்பிரமுகர்களும் வரவேற்றனர். அதன்பின்னர் அவர்கள் தமது ஊர்களை நோக்கிப் புறப்பட்டனர்.

# ஜனாதிபதி வேட்பாளராக நாமல் களமிறங்கினால் முழு ஆதரவு!

## மொட்டு எம்.பி. வீரசிங்க கூறுகின்றார்




எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷவைக் களமிறக்குவதற்குக் கட்சி தீர்மானித்தால் அதற்கு முழு ஆதரவு வழங்கப்படும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ. டி. வீரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"நபர்கள் முக்கியம் அல்ல, கட்சி எடுக்கும் முடிவே எமக்கு முக்கியம். எனக்குத் தனிப்பட்ட நிலைப்பாடு இருந்தாலும் கட்சியின் முடிவுக்கே கட்டுப்படுவேன்.

நாமல் ராஜபக்ஷ சிறந்த இளம் தலைவர். தூர நோக்கு சிந்தனை உள்ளது. சர்வதேசத்துடன் சிறந்த தொடர்பைப் பேணி வருகின்றார். எனவே, இளைஞர் ஒருவருக்கும் வாய்ப்பளிப்பது நல்லது." – என்றார்.

## எந்த அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முத்தையன்கட்டு, இடதுகரை தமிழ்க் கலவன் பாடசாலைக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் எதிர்க்கட்சித் தலைவர் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டின் பிரச்சினைகள் குறித்து விவாதம் தேவை என தற்போது சமூகத்தில் பேசப்படுகின்றது. இத்தகைய தொரு விவாதம் நடக்க வேண்டும் என்பதை நாமும் ஏற்றுக் கொள்கின்றோம்.

விவாதங்களை நடத்துவது ஜனநாயக சமூகத்தின் உயர் பண்பு என்பதால் பொருளாதாரம், சமூகம், அரசியல், சர்வதேசம் என எந்தவொரு தலைப்பிலும் விவாதத்தில் ஈடுபட நாம் தயாராக இருகின்றோம்.

அதேபோல், விவாதம் புரிவதன் மூலம் நாட்டுக்கும் மக்களுக்கும் பெறுமானம் சேர்ப்பதாக அமைய வேண்டும்.

எதிர்க்கட்சியில் இருக்கும் காலத்தில் விவாதங்களுடன் மாத்திரம் மட்டுப்படாமல் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும்." – என்றார்.













# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நல்லிணக்கம் வராது

விதி வலியது. ஊழ்வினை இன்னும் வலியது. இரண்டுமே தாமதித்தேனும் பழி தீர்க்கும். நின்று கொல்லும். அதுதான் உலக நடைமுறை. நியதி.

69 லட்சம் வாக்குகளுடன் அபரிமிதமான வெற்றியை ஈட்டிய கோட்டாபய ராஜபக்ஷ வினால் அந்த வெற்றியைச் சரியாக சுவைக்க முடியவில்லை. நாட்டை மீட்ட தலைவர் என்று போற்றப்பட்டவர் இடைவழியில் நாட்டை விட்டு 'தலை தப்பியது தம்புரான் புண்ணியம்' என்று ஓடித்தப்ப வேண்டியவரானார். இன்று நாடு திரும்பினாலும் கூட, எல்லோராலும் ஒதுக்கப்பட்டு, சீண்டப்படாதவராக, தீண்டத் தகாதவராக, நடைப்பிணம் போல, அவர் ஒதுங்கி வாழ வேண்டிய நிர்ப்பந்தம். கட்டாயம்.

இவையெல்லாம் காரணமின்றி நடந்தவை அல்ல. கோட்டாபயவின் வினையை இரண்டாக வகுக்கலாம். ஒன்று வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் கூட்டத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள். மற்றது இறந்தபோன மக்கள் கூட்டத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட காட்டுமிராண்டித்தனம்.

இந்த வினைகளுக்கு பதில்கூற வேண்டியவராக கோட்டாபய சிக்குபட்ட பட்டறிவின் பின்னரும் கூட, அந்த கொடூரங்களை இனவாத நோக்கில் பார்க்கும் சிறுமைத்தனத்திலிருந்து பௌத்த - சிங்களப் பேரினவாதம், தென்னிலங்கை பெரும் தேசியவாத அரசியல் மனவமைப்பு, இன்னும் வெளியே வரவேயில்லை, மாறவேயில்லை என்பதுதான் இதில் உள்ள விநோதம். விபரீதம். விவகாரம் எல்லாமுமே.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலிலும் அப்பாவிகள் பல நூறு பேர் கொல்லப்பட்டார்கள். படுகாயம் அடைந்தார்கள். பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

அதேபோல யுத்தத்தின் இறுதி கட்டத்தில் கோட்டாபயவின் முப்படை நிர்வாகம் புரிந்த கொடூரத்தில் பல்லாயிரம் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். படுகாயப்படுத்தப்பட்டார்கள். ஓர் இனத்தின் வாழ்வியலே சிதைத்து அழிக்கப்பட்டது. கொடூரமாக அது நிர்மூலமாக்கப்பட்டது.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு நீதி, நியாயமான விசாரணைகளைக் கோரும் தென்னிலங்கை, யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் பல்லாயிரக்கணக்கான அப்பாவிகளைக் கொன்றொழித்து, பல்லாயிரம் பேரை வலிந்து காணாமலாக்கி, ஒரு தலைமுறையையே குற்றுயிரும் குலையுயிருமாக நாசமாக்கிய யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள் குறித்து நீதி, நியாயமான விசாரணைகளை வலியுறுத்தாமல் விட்டேத்தியாக நிற்கின்றது.

இத்தகைய நீதி விசாரணைக்கு வலியுறுத்த மறுப்பதன் மூலம், இக்கொடூரக் குற்றங்களுக்கான முழுப் பொறுப்பும் கூட முழுத் தென்னிலங்கை மீதும் சுமத்தப்படுவது கூடத் தவறல்ல என்ற நிலைப்பாடு உருவாகிறது.

அடுத்த கொடூரம் உயிரிழந்த மனிதர்கள் மீது இழைக்கப்பட்டது.

கொவிட் தொற்றில் உயிரிழந்த முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் உடலங்களை வல்வந்தமாக எரித்ததன் மூலம் மனித நாகரிகத்துக்கு ஒவ்வாத காட்டுமிராண்டித்தனத்தை புரிந்தது கோட்டா அரசு.

அதற்காக தெற்கிலிருந்து இன்னும் மன்னிப்பு கேட்கும் குரல்கள் எழுகின்றன. அது நல்லதுதான். வரவேற்கத்தக்கதுதான்.

ஆனால் யுத்தத்தில் உயிரிழந்த பல்லாயிரம் போராளிகளின் வித்துடல்கள் புதைக்கப்பட்ட மாவீரர் துயிலும்இல்லங்கள் புல்டோஸர்கள் கொண்டு உழுது, அவர்களின் கல்லறைகளைச் சிதைத்த சிங்க(ள)க் காட்டுமிராண்டித்தனத்தை கண்டிப்போரோ அதற்காக மன்னிப்பு கோருவோரோ தென்னிலங்கையில் எவருமில்லை.

புத்தர் உயிருடன் இருந்திருந்தால் தனது மதத்தின் பெயரால் ஆட்சி நடக்கும் ஒரு நாட்டில் உயிரிழந்தவர்களின் பல்லாயிரம் கல்லறைகளை புல்டோஸர்கள் கொண்டு சிதைத்தழித்த கொடூரக் காட்டுமிராண்டித்தனத்தை - மிருகத்தனத்தை - அறிந்து பெரும் துயரில் மூழ்கி இருப்பார். புத்த சீலத்தின் மாண்பு இப்படியாவிட்டதே என்று மனம் குமுறி இருப்பார்.

உயிரோடு இருப்போர் மீதும், உயிரிழந்தோர் மீதும் இழைக்கப்பட்ட கொடூரங்களை தென்னிலங்கை இன்னும் நடுநிலைக் கண்ணோடு பார்க்கவில்லை. இன்னும் இனவாதம் கொண்டு, பேரினவாத மேலாண்மை வெறிப் போக்கிலேயே நோக்குகின்றது.

அத்தகைய நாட்டில் நல்லிணக்கம் சாத்தியமற்றது என்பது தெளிவு.

# தாய்வானில் பாரிய நிலஅதிர்வு: பலி எண்ணிக்கை மேலும் உயர்வு



தாய்வானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். 800 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

தாய்வானில் கடந்த 25 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு நேற்று காலை 7.4 மெக்னிட்யூட் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

தீவின் கிழக்கு கடற்கரையை உலுக்கிய இந்த நிலநடுக்கம் உள்ளூர் நேரப்படி காலை 7:58 மணிக்கு பதிவாகியுள்ளது.

Hualien நகருக்கு தெற்கே 18 கிலோமீட்டர்கள் (11 மைல்கள்) தூரத்தில் 34.8 கிலோமீட்டர்கள் (21 மைல்கள்) ஆழத்தில் இந்த நிலநடுக்கம் பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன்போது, நெடுஞ்சாலை சுரங்கங்களில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

தாய்வானின் தேசிய தீயணைப்பு நிறுவனம் இறப்பு எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளதாகவும் 882 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# காஸா மக்களுக்காக உணவுப் பொருள்களை கொண்டு சென்ற வாகனத்தின் மீது தாக்குதல்!

## 7 ஊழியர்கள் பலி




காஸா மக்களுக்கு உணவுப் பொருள்களை வழங்குவதற்காக சென்று கொண்டிருந்த தொண்டு நிறுவன வாகனத்தின் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 7 ஊழியர்கள் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த World Central Kitchen (WCK) தொண்டு நிறுவனத்தை சேர்ந்த ஊழியர்களில் ஒருவரைத் தவிர அனைவரும் வெளிநாட்டினர்.

பிரிட்டன், அவுஸ்திரேலியா, போலந்து, பாலஸ்தீனத்தை சேர்ந்தவர்களும், அமெரிக்கா மற்றும் கனடா நாடுகளின் இரட்டைக் குடியுரிமை பெற்ற ஒருவரும் உயிரிழந்தவர்களில் அடங்குவர்.

மிகப்பெரிய அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ள இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, WCK தொண்டு நிறுவனம் சேகரித்த உணவுப் பொருட்களுடன் காஸாவை நோக்கி சென்று கொண்டிருந்த நிவாரணக் கப்பல்கள் திருப்பி அழைக்கப்பட்டுள்ளன.

மோதல் நடைபெறாமல் அமைதியாக இருந்த பகுதி வழியாக, WCK-இன் இலச்சினை பெரிதாகப் பொறிக்கப்பட்ட வாகனங்களில் சென்றுகொண்டிருந்த போதும் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு எத்தகைய குழப்பமும் காரணமில்லை எனவும் தமது ஒவ்வொரு நகர்வு குறித்தும் இஸ்ரேல் இராணுவத்திடம் அறிவித்திருந்த போதும் தமது வாகனத்தின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் WCK தரப்பில் கூறப்பட்டுள்ளது.

போரில் உணவு ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்படும் மிக மோசமான சூழலில் நடத்தப்பட்ட இந்த தாக்குதலை மன்னிக்க முடியாது என அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது தவறுதலாக இடம்பெற்ற தாக்குதல் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

“உதவிப் பணியாளர்கள் உயிரிழந்தது வருத்தம் அளிக்கிறது. இது கடுமையான தவறு. சிக்கலான சூழ்நிலைகளில் தவறாக அடையாளம் காணப்பட்டதன் விளைவாக இது ஏற்பட்டுவிட்டது. இது நடந்திருக்கக் கூடாது. இது தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்படும்,” என இஸ்ரேல் இராணுவத்தின் லெப்டினன்ட் ஜெனரல் ஹெர்சி ஹலேவி குறிப்பிட்டுள்ளார்.

“இது ஒரு சோகமான சம்பவம். துரதிர்ஷ்டவசமானது மற்றும் திட்டமிடப்படாதது. ஆனால், போர்க் காலத்தில் இது போன்று நடக்கும்” என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த தாக்குதலுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. ஸ்பெயினும் போலந்தும் இஸ்ரேலிடம் விளக்கம் கோரியுள்ளது.

இந்த விவகாரத்தை அவசரமாக விசாரிக்க இஸ்ரேலை இங்கிலாந்து வலியுறுத்தி உள்ளது.

பொதுமக்களைப் பாதுகாப்பதில் போதுமான நடவடிக்கையை இஸ்ரேல் மேற்கொள்ளவில்லை என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கூறியுள்ளார்.

# ஜனநாயகத்துக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது

## சிதம்பரத்தில் கமல்ஹாசன் பிரச்சாரம்



"ஜனநாயகத்துக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான், நான் தம்பி திருமாவளவனோடு தோள் உரசி களம் கண்டிருக்கிறோம். இந்த முறை பா.ஜ.கவுக்கு இன்னொரு வாய்ப்பு கொடுத்துவிட்டால், ஜனநாயகமே இருக்காதோ என்று அறிஞர்கள் கவலைப்படுகிறார்கள். அவர்கள் அறிஞர்கள் கவலை மட்டும் படுவார்கள். நாங்கள் வீரர்கள் களம் கண்டே ஆக வேண்டும்."

– இவ்வாறு சிதம்பரத்தில் போட்டியிடும் திருமாவளவனை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்ட மநீம தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலில் சிதம்பரம் தொகுதியில் தி.மு.க. கூட்டணி சார்பில் வி.சி.க. தலைவர் திருமாவளவன் போட்டியிடுகிறார். அவரை ஆதரித்து மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் நேற்று சிதம்பரம் மேலரத வீதியில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

இதன்போது அவர் உரையாற்றுகையில்,

"ஜனநாயகத்துக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான், நான் தம்பி திருமாவளவனோடு தோள் உரசி களம் கண்டிருக்கிறோம்.

இந்த முறை பா.ஜ.கவுக்கு இன்னொரு வாய்ப்பு கொடுத்துவிட்டால், ஜனநாயகமே இருக்காதோ என்று அறிஞர்கள் கவலைப்படுகிறார்கள். அவர்கள் அறிஞர்கள் கவலை மட்டும் படுவார்கள். நாங்கள் வீரர்கள்... களம் கண்டே ஆக வேண்டும். என் கட்சிக்காரர்கள் என்ன அண்ணே, இந்த முறை தியாகம் செய்துவிட்டீர்களே என்று கூறுகின்றனர். இது தியாகம் அல்ல வியூகம். திருமாவளவனுக்கும் அதே பிரச்சினை வந்தது. எத்தனை ஆண்டுகளாகத்தான் இரண்டு இடங்கள், மூன்று இடங்கள் கேட்டுப் பார்த்தார்கள். ஆனால், அது அல்ல இப்போதைய தேவை.

களம் காண வேண்டியதே தேவை. அதற்காகத்தான் திருமாவளவனும் வந்திருக்கிறார். நானும் வந்திருக்கிறேன். நல்லவேளை அரசியலுக்கு வந்ததற்காக, 25 ஆண்டுகள் கழித்து தாமதமாக நன்றி கூறுகிறேன். ஆனால் திருமாவளவன் வந்தே ஆக வேண்டும். அதை புரிந்துகொண்டதால்தான், மக்களின் தேவை, சேவையை அறிந்து அன்றே அரசியலுக்கு வந்தவர் திருமாவளவன். அவருக்கும் இன்று தாமதாக நன்றி கூறுகிறேன்.

அவரை தனிப்பட்ட முறையில் நான் பலமுறை பாராட்டியிருக்கிறேன். திருமாவளவனுக்கு 60 வயதாகும்போது, திருமாமணி என்ற மலரை வெளியிட்டனர். அந்த மலரில் என்னுடை கட்டுரையும் இடம்பெற்றிருந்தது. அதில் நான் அவரை, தன்நிகரில்லா தன்நேரில்லா தமிழர் என்று ஒரு தலைப்பைக் கொடுத்திருந்தேன். இன்றும் தூக்கத்தில் எழுப்பி திருமாவளவன் குறித்து கேட்டால் அந்த வாக்கியம்தான் நினைவில் ஓடும்.

நான் கூறியபடி, மானுட சமுதாயம் பின்னோக்கி இழுக்கப்படும் போதெல்லாம், தனது அர்ப்பணிப்பு தேவை என்று உணர்ந்து தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் திருமாவளவன். தாழ்த்தப்பட்டவர் என்ற வரிசையில் யார் இருந்தாலும், அவர்களுக்காக குரல் கொடுப்பவர் இவர். தன் நேரில்லா தமிழர் பெருஞ்சிறுத்தை என் தம்பி திருமாவளவன். இவரது ஆற்றல்மிக்க பேச்சும், ஞானமும் என்னை என்றும் கவர்ந்திருக்கிறது." – என்றார்.

# இந்திய கோடீஸ்வரர் பட்டியல் வெளியீடு: அம்பானி முதலிடம், அதானி 2 ஆம் இடம்



2024 ஆம் ஆண்டின் 200 இந்திய கோடீஸ்வர்களின் பட்டியலை "போர்ப்ஸ்" வெளியிட்டுள்ளது.

இதில் முகேஷ் அம்பானி முதலிடமும், கவுதம் அதானி இரண்டாம் இடமும் பிடித்துள்ளனர்.

போர்ப்ஸ் நிறுவனம் ஆண்டுதோறும் அதிக சொத்து மதிப்பு கொண்ட இந்திய கோடீஸ்வரர்களின் பட்டியலை வெளியிட்டு வருகிறது.

இந்த ஆண்டு அந்நிறுவனம் வெளியிட்டுள்ள இந்திய கோடீஸ்வரர்கள் பட்டியலில் சுமார் 200 பேர் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டு வெளியான பட்டியலில் 169 பேர் இடம் பெற்றிருந்தனர். இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களின் மொத்த சொத்த மதிப்பு சுமார் 954 பில்லியன் அமெரிக்கடொலர்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு சொத்து மதிப்பை விட 41 சதவீதம் அதிகமாகும்.

இந்தப் பட்டியலில் 116 பில்லியன் சொத்து மதிப்புடன் ரிலையன்ஸ் குழும தலைவர் முகேஷ் அம்பானி முதலிடம் பிடித்துள்ளார். உலக அளவில் இவர் 9 ஆவது இடத்தில் இருக்கிறார். 100 பில்லியன் டொலர் கிளப்பில் இணைந்த முதல் இந்திய கோடீஸ்வரர் முகேஷ் அம்பானி என்பது குறிப்பிடத்தக்கது.

அம்பானிக்கு அடுத்து, 84 பில்லியன் அமெரிக்க டொலர் சொத்து மதிப்புடன் அதானி குழும தலைவர் கவுதம் அதானி இரண்டாம் இடத்தில் இருக்கிறார். இந்தப் பட்டியலில் நான்காம் இடத்தில் இந்தியாவின் கோடீஸ்வர பெண்மணியாக அறியப்படும் சாவித்ரி ஜிண்டால் 33.5 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் உள்ளார். இவர் கடந்த ஆண்டு பட்டியலில் ஆறாம் இடத்தில் இருந்தவர்.

இந்தப் பட்டியலில் நரேஷ் ட்ரெஹான், ரமேஷ் குன்ஹி கண்ணன் மற்றும் ரேணுகா ஜக்தியானி உள்ளிட்ட 25 புதிய கோடீஸ்வரர்களும் இணைந்துள்ளனர்.



# போராட்டக் களத்தில் கூட்டமைப்பினர்

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று 10 ஆவது நாளாகத் தொடர்ந்தது. போராட்டக் களத்துக்கு நேற்று மாலை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்வாதிகள் சிலர் வருகை தந்தனர். அவர்களும் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- பாறுக் ஷிஹான்)

















# கல்முனையில் டியூசன் வகுப்புகளை இடைநிறுத்துமாறு அறிவுறுத்தல்!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை ஆட்புல எல்லையினுள் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களில் தரம்-01 தொடக்கம் தரம்-10 வரையான மாண வர்களுக்கான அனைத்து கல்வி நடவ டிக்கைகளையும் ஏப்ரல் 04 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை தற் காலிகமாக இடைநிறுத்துமாறு கல் முனை மாநகர சபை அறிவுறுத்தி யுள்ளது.

இது தொடர்பாக மாநகர ஆணை யாளர் ஏ.எல்.எம். அஸ்மி வெளி யிட்டுள்ள விசேட அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முஸ்லிம்களின் புனித நோன்பு மற்றும் தமிழ், சிங்கள புது வருடப் பிறப்பு போன்ற பல முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகைகளினைக் கொண்ட இம்மாதமானது அதிக உஷ்ணம் நிறைந்ததாக காணப்படுகின்றது.

இருந்த போதிலும் கல்முனை



மாநகர சபை எல்லைக்குட்பட்ட தனி யார் கல்வி நிலையங்களில் பொருத்த மற்ற நேரங்களில் தொடர்ச்சியான வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருவதானது மாணவர்களுக்கும் பெற்றோர்களுக் கும் பொதுமக்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் பல்வேறு சிர மங்களை ஏற்படுத்துவதாக மத அமைப் புக்கள் மற்றும் பொது மக்களிடம் இருந்து எமக்குத்தொ டர்ச்சியாக முறைப் பாடுகள் கிடைக்கப் பெற்று வருகின் றன.

இவற்றைக் கருத்தில் கொண்டு கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிலை யங்களிலும் தரம்-01 தொடக்கம் தரம்-10 வரையான மாணவர்க ளுக்கான அனைத்து கல்வி நடவடிக் கைகளையும் 2024.04.04 ஆம் திகதி தொடக்கம் 2023.04.15 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடை நிறுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்வதாக அவர் வலி யுறுத்தியுள்ளார்.

இது தொடர்பான அறிவுறுத்தல் கடிதத்தின் பிரதிகள் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர், கல்முனை, சாய்ந்தமருது மற்றும் பெரிய நீலா வணை பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# சாமிமலையில் 3 கடைகள் செவ்வாய் நள்ளிரவு சூறை!

## அவற்றில் ஒன்று மதுபான நிலையம்



(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா சாமிமலை பகுதியில் ஒரு மது பான விற்பனை நிலையம் மற்றும் இரண்டு வர்த்தக நிலையங்கள் நேற்று முன்தினம் நள்ளிரவில் சூறையாடப் பட்டுள்ளன.


இது குறித்து மஸ்கெலியா பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்த இடத்திற்கு மஸ்கெ லியா பொலிஸார் சென்று விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு மூன்று வர்த்தக நிலையங்களும், கடந்த வாரம் மஸ்கெலியா நகரில் உள்ள பிரதான மது விற்பனை நிலையமும் நள்ளிரவில் சூறை யாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைகளில் மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கும் திட்டம்

## பதினொரு பாடசாலைகளில் ஆரம்பம்




தரம் 9 இற்கு மேற்பட்ட பாட சாலை மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கும் முன்னோ டித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள 11 பாடசாலை களில் இந்த திட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதாக இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் தொழில் வழிகாட்டல் மற்றும் ஊக் குவிப்பு பணிப்பாளர் ஈ.ஏ.டி.எஸ். சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை மற்றும் 13 கைத் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து இந்த திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது.

பாடசாலை காலப்பகுதியி லும் அதற்கு பின்னரும் பாட நெறிக்கு அப்பாற்பட்ட செயற் பாடாக இந்த தொழில் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

மின்சார மோட்டார், சைக்கிள் பராமரிப்பு, ஹோட்டல்கள், அழகுக் கலை மற்றும் கட்டட ஓவியம் போன்ற திட்டங்கள் இதில் அடங்கு கின்றன.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# நீதிமன்றத்தில் வாக்குமூலம் மைத்திரி வழங்க மாட்டார்!

## அவரது சட்டத்தரணி மன்றுக்கு தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, மாளிகாகந்த நீதி வான் நீதிமன்றத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இன்று வாக்கு மூலம் அளிக்கப்போவதில்லை என மாளிகாகந்த நீதவான் லோச்சனா அபேவிக்ரமவிற்கு நேற்று தெரியப் படுத்தியுள்ளார்.

தனது சட்டத்தரணி சந்தீப்த சூரி யாரச்சியின் ஊடாக நகர்த்தல் பத்திர மொன்றை தாக்கல் செய்து மைத் திரிபால சிறிசேன இதனைத் தெரி வித்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், தமது தரப்பு சேவைபெறுநர் சம்பவம் தொடர்பில் விரிவான வாக்குமூலத்தை குற்றப்புலனாய்வு திணைக்களத் தில் முன்னிலையாகி வழங்கியுள் ளார் என அவரது சட்டத்தரணி அனுஜ ப்ரேமரத்ன தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக நீதிமன்றத்தில் முன்னிலையாகி மீண்டும் வாக்குமூலம் வழங்க இயலாது என அவர் நீதி மன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த மாளிகாகந்த நீதவான், ஏற்கனவே அறிவிக்கப்பட்டமைக்கு அமைய இன்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமெனவும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்றைய தினம் நீதிமன்றத் தில் முன்னிலையாக வேண்டிய அவ சியமில்லை எனவும் அறிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் மைத்திரிபால சிறிசேன, குற்றப்புலனாய்வுத் திணைக்களத் திற்கு வழங்கிய வாக்குமூலத்திற் கமைவாக, நீதிமன்றத்தில் இன்று வாக்குமூலம் வழங்குமாறு மாளி காகந்த நீதவான் நீதிமன்றம் அண் மையில் உத்தரவிட்டிருந்தது.





# அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கட்டாக்காலி மாடுகளினால் விபத்துக்கள்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் பல பகுதிகளிலுமுள்ள பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையினால் வாகன சாரதிகளும் பாதசாரிகளும் பாடசாலை மாணவர்களும் பெண்களும் முதிய வர்களும் பலவிதமான பிரச்சினை களுக்கு முகம் கொடுக்க வேண்டி யுள்ளது.

கட்டாக்காலி மாடுகளை மேய்ச் சலுக்கு விடுவோர் ஆய்ந்தோய்ந்து பாராமல் தமது பராமரிப்பிலுள்ள மாடுகளை விளைச்சல் நிலங்களி லும் மக்கள் பயன்படுத்தும் பாதை களிலும் குறிப்பாக பிரதான வீதிகளிலும் விடுவதனால் ஆபத்தான பல சம்ப வங்கள் அண்மைக்காலங்களில் இடம்பெற்றுள்ளன.

வீதியில் பயணிக்கும் மோட்டார் சைக்கிளுக்கு முன்னால் இவை திடீரென பாய்வதால் விபத்துக்குள் ளாகி பலர் உயிரிழந்துள்ளமையுடன் அங்கவீனர்களாகவும் மாறும் நிலை இந்த பிரதேசத்தில் ஏற்படுகின்றது.

மாடுகள் கழிக்கும் மலத்தினால் பலவிதமான சுகாதார சீர்கேடுகள் இடம்பெறுவதுடன் மலத்தில் வழுக்கி விபத்துக்களும் சம்பவித்துள்ளன.

கல்முனை மாநகர சபையாலும் ஏனைய பிரதேச சபைகளினாலும் இவ்விடயம் தொடர்பாக பலமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தொடர்ச்சியான, நிலையான திட்டமொன்று வகுக்கப்படாமையி னால் தொடர்ந்தும் இக் கட்டாக்காலிகள் பிரதான வீதிகளிலேயே திரிகின் றன.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதி காரிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனப் பிரதேச மக்கள் கேட் டுள்ளனர்.

# இந்துக்கோவில்களை சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்க பிரதமர் மோடியின் உதவியை நாடுங்கள்!

## தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம் தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலைக்கு அழைப்பு






(கே.வசந்தன்)

இலங்கையில் இந்துக் கோவில்களை சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்க பிரதமர் மோடியின் உதவியை நாடுங்கள் என தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலைக்கு தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

வவுனியாவில் தொடர்ச்சியாக உணவுத்தவிர்ப்புப் போராட்டம் மேற்கொண்டுவரும் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் நேர்ர்ய் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அதன்பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள் –

தமிழர்களுக்கு நடந்தது இனப்படுகொலை என்று பல தலைவர்கள் கூறியும் தமிழ் நாட்டிலுள்ள பாரதிய ஜனதா கட்சி தமிழ் இனப்படுகொலை விவகாரத்தில் மௌனம் காக்கின்றது. அவர்கள் தமிழர் ஆதரவை நாடினால், இனப்படுகொலையை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, இந்திய நாடாளுமன்றத்தில் அதனை அறிவிக்க வேண்டும்.

பாரதிய ஜனதா கட்சி தன்னை இந்து மதத்தின் பாதுகாவலராக சித்தரிக்கிறது. பிரதமர் நரேந்திர மோடி மற்றும் கட்சித் தலைவர் அமித்ஷா இருவரும் தங்கள் வார்த்தைகள் மற்றும் செயல்கள் மூலம் இந்து மதத்தின் மீது அசைக்க முடியாத உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறார்கள்.

அண்ணாமலை அவர்களே, சிங்கள பௌத்தர்களால் குருந்தூர்மலை, வெடுக்குநாறி, கிண்ணியா வெந்நீர் ஊற்றுகள் மீது அண்மைக்காலமாக இடம்பெற்ற ஆக்கிரமிப்புக்கள் தொடர்பில் நாம் அச்சமடைந்துள்ளோம். இந்த விஷயத்தில் நீங்கள் ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள்? நீங்கள் பௌத்த ராகவா அல்லது இந்துவாகவா உங்களை அடையாளப்படுத்துகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறோம்.

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை உண்மையிலேயே தன்னை ஒரு பெருமைமிக்க தமிழ் இந்து என்று கருதினால், தமிழினப்படுகொலையை அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்குமாறு மோடி மற்றும் அமைச்சர் அமித்ஷாவை வலியுறுத்த வேண்டும். தமிழ் இந்து கோவில்களை விட்டு விலகுமாறு சிங்களவர்களைக் கேட்க வேண்டும். இந்து கோவில்களின் நீண்டகாலப் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பிரதமர் மோடியும் அமைச்சர் அமித்ஷாவும் ஒரே இரவில் காஷ்மீரின் அரசமைப்பை மாற்றினார்கள். இலங்கையிலும் ஒரே இரவில் அதனை செய்ய முடியும். அப்படி நடந்தால் தமிழக தமிழர்கள் அனைவரும் பா.ஜ.கவை ஆதரிப்பார்கள். – என்றனர்.





# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சர்வதேச கல்வியியல் ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழாவை முன்னிட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின்படிப்புகள் பீடமும், கலைப்பீடத்தின் கல்வியியல்துறையும் இணைந்து முன்னெடுக்கும் முதலாவது சர்வதேச கல்வியியல் ஆய்வு மாநாடு – 2024 எதிர்வரும் ஏப்ரல் 20 மற்றும் 21ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிவக்கொழுந்து சிறீசற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் செ. கண்ணதாசன் தலைமையில் இடம்பெற்றது.



# வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளராக சுகுணன் பதவியேற்றார்

(கே.வசந்தன்)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் புதிய பணிப்பாளராக ஜி.சுகுணன் கடமையைப் பொறுப்பேற்றார்.

வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, மாவட்ட பொது வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களின் இடமாற்றங்கள் இடம்பெற்றன. அந்த வகையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் புதிய பணிப்பாளராக ஜி.சுகுணன் நேற்றுக் காலை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் விசேட பூஜை வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளராக தனது கடமைகளை அவர் ஆரம்பித்தார்.

புதிய பணிப்பாளர் ஜி.சுகுணன் இதற்கு முன்னர் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# அனுமதிப் பத்திரமின்றி சுருக்குவலை தொழில் புரிவோருக்கு எச்சரிக்கை!

(வாஸ் கூஞ்ஞ)

அனுமதி பத்திரம் இல்லாமல் சுருக்கு வலைகள் மூலம் மீன் பிடியில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மன்னார் கடற்தொழில் திணைக்களம் மன்னார் மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மன்னார் கடற்தொழில் திணைக்களம் மன்னார் மீனவர்களுக்கு விடுத்திருக்கும் அறிவித்தலில் மன்னார் மாவட்டத்தில் ஒரு சிலரே சுருக்கு வலை தொழில் செய்வதற்கு அனுமதிப் பத்திரம் பெற்றுள்ளனர்.

ஆனால் சிலர் அனுமதி பத்திரம் பெறாது இத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இதற்கான அனுமதி பத்திரம் இன்றியும் பிற்பகல் 6 மணிக்கு பின்னரும் சுருக்குவலைத் தொழிலில் எவரும் ஈடுபட வேண்டாம் என மன்னார் கடற்தொழில் திணைக்களம் மன்னார் மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் அனுமதி பத்திரம் பெறாது தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மன்னார் கடற்தொழில் திணைக்களம் மன்னார் மீனவர்களுக்கு தெரிவித்துள்ளது.

# டெல்மார் தோட்டத்தின் தெப்பக்குளத்தில் சடலமாக மிதந்த இளம் குடும்பப் பெண்!



(ஆ.ரமேஸ்)

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெல்மார் மேற்பிரிவு தோட்ட தெப்பக் குளத்தில் நீரில் மிதந்த நிலையில் குடும்ப பெண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை இராகலை பொலிஸாரால் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இன்னும் 18 வயது பூர்த்தியடையாத (பிறந்த திகதி: 2006.06.20) ரன்ஜீத்குமார் சதூர்சிகா என்ற யுவதியே உயிரிழந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:–

இந்தப் பெண் நானு ஓயா பிரதேச தோட்டப்பகுதியிலிருந்து டெல்மார் கீழ் பிரிவு தோட்டத்திற்கு கடந்த மூன்று வருடங்களுக்கு முன் காதல் திருமணம் முடித்து வந்துள்ளார்.

குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக கடந்த 30 ஆம் திகதி சனிக்கிழமை வீட்டை விட்டு வெளியேறி காணாமற் போயுள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் பெண்ணின் கணவர் தனது மனைவி வீட்டைவிட்டுக் காணாமற் போயுள்ளார் என உடப்புஸ்ஸலாவை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவிட்டுள்ளார்.

நேற்றுக் காலை டெல்மார் மேற்பிரிவுத் தோட்ட தெப்பக்குளத்தில் சடலம் ஒன்று மிதப்பதைக் கண்ட தோட்ட மக்கள் இராகலை பொலிஸாருக்கு அறிவித்தனர். சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் குளத்திலிருந்து சடலத்தை மீட்டனர்.

சம்பவம் குறித்து அவர்கள் வலப்பனை நீதிவான் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த வலப்பனை நீதிமன்றபதில் நீதிவான் சந்திரிகா நவரத்தின முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது.

பின் சடலத்தை சட்ட வைத்தியர் ஒருவரின் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

# தேயிலை விளைச்சல் வீழ்ச்சி



நாட்டில் நிலவும் வறட்சி காரணமாக தேயிலை விளைச்சல் 30 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வறட்சியினால் தேயிலை தோட்டங்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் தேசிய சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் லால் பிரேமநாத் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தேயிலை உற்பத்தி பாரிய அளவில் வீழ்ச்சியடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தரமான தேயிலை உற்பத்திகளை பெற்றுக்கொள்வதில் தற்பொழுது சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சஜித், ரங்க பண்டார இருவரையும் சந்தித்து ‘13’ஐ வலியுறுத்தியது ‘மக்கள் மனு’ அமைப்பு

## ‘மக்கள் மனு’ - வடக்கு கிழக்கு சிவில் சமூகக் குழுவின் ஊடக அறிக்கை





வடக்கு – கிழக்கு சிவில் சமூகக் குழுவான “மக்கள் மனு” அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் எதிர்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்க பண்டார ஆகிய இருவரையும் தனித் தனியாக நேரில் சந்தித்து அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

இது தொடர்பாக அந்த அமைப்பு நேற்று விடுத்த செய்திக் குறிப்பின் முழு விவரம் வருமாறு:-

தமிழ் மக்கள், அவர்களது தாயகத்தில் கௌரவத்துடனும் நல்லிணக்கத்துடனும் வாழும் வகையிலான அரசியல் தீர்வு உறுதிப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திவரும் “மக்கள் மனு“ எனும் வடக்கு – கிழக்கு சிவில் சமூகக் குழு, 02.04.2024 அன்று, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்க பண்டாரவை, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை காரியாலயமான சிறிகொத்தாவில் சந்தித்து, கலந்துரையாடியிருந்தது.

இந்த சந்திப்பின் போது, மக்கள் மனு சிவில் சமூகக் குழுவின் உறுப்பினர்களான டான் தொலைகாட்சியின் தலைவர் எஸ்.எஸ்.குகநாதன், அரசியல் ஆய்வாளர் ஆ.யதீந்திரா, மூத்த ஊடகவியலாளர் மகாலிங்கசிவம், சட்டத்தரணி பு.முகுந்தன், திரு. வினோத் தியாகராஜா மற்றும் திருமதி சுவர்ணா நவரெட்ணம் ஆகியோர் பங்குகொண்டிருந்தனர்.

இதே தினம் மாலை, இலங்கையின் எதிர்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவை, எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தோம். இந்த சந்திப்பின் போது, மக்கள் மனு சார்பில், ஆ.யதீந்திரா, மகாலிங்கசிவம், பு.முகுந்தன், வினோத் தியாகராஜா மற்றும், திருமதி சுவர்ணா நவரெட்ணம் ஆகியோர் பங்கு கொண்டிருந்தனர்.

இதன் போது, பின்வரும் விடயங்களை “மக்கள் மனு“ வடக்கு கிழக்கு சிவில் சமூகக் குழு சுட்டிக்காட்டியிருந்தது.

யுத்தத்திற்கு பின்னரான நல்லிணக்க முயற்சிகள் எதிர்பார்த்தவாறு முன்னோக்கிப் பயணிக்கவில்லை. தொடர்ந்தும், தமிழ் மக்கள் மத்தியில் அவநம்பிக்கையான சூழலே காணப்படுகின்றது. யுத்தத்திற்கு பின்னரான கடந்த பதின்நான்கு வருடகால அரசியலில், 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் மட்டுமே ஓரளவு நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது. எனினும், அத்தகைய சூழலில் கூட, தமிழ் மக்களின் எதிபார்ப்புக்கள் ஈடேறவில்லை. இதுவரையான அனுபவங்களை தொகுத்து நோக்கும் போது, புதிய அரசியல் யாப்பின் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அரசியல் சூழல் இருப்பதாக நாம் கருதவில்லை.

இந்தப் பின்புலத்தில் நல்லிணக்கத்தில் முன்னோக்கி பயணிக்க வேண்டுமாயின், அரசமைப்பின், 13 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் உறுதிப்படுத்தப்பட்டவைகள் அனைத்தையும் முழுமையாக அமுல்படுத்துவதன் மூலமே, பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஓரளவாவது நம்பிக்கையை ஏற்படுத்த முடியுமென்று நாம் நம்புகின்றோம்.

முன்னர் இழைக்கப்பட்ட தவறுகள் மீளவும் இடம்பெறாத வகையில், விடயங்கள் தூரநோக்குடன் கையாளப்பட வேண்டும். இந்த விடயங்கள் அனைத்தும், ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

மேலும், ஒரு பொறுப்பு வாய்ந்த சிவில் சமூகம் என்னும் வகையில், இந்த நாட்டை அனைவருமாக ஒன்றிணைந்து முன்னோக்கி கொண்டு செல்வது பற்றி மட்டுமே நாம் சிந்திக்கின்றோம். இலங்கையின், ஒரு பகுதி மக்களான தமிழ் மக்களை அதிருப்தியில் வைத்துக் கொண்டு, நாட்டை நாம் பொருளாதா. ரீதியில் முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது என்பதையும் நாம் மேற்படி சந்திப்புக்களின் போது சுட்டிக்காட்டியிருந்தோம்.

மேற்படி இரண்டு சந்திப்புக்களின் போதும் சாதகமான பதில்களே கிடைக்கப்பெற்றன. மக்கள் மனு – சிவில் சமூகக் குழுவின் எதிர்பார்ப்புக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்குக் கொண்டு செல்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்க பண்டார தெரிவித்திருந்தார்.

“என்னிடம் இனவாத நிகழ்ச்சி நிரல் இல்லை, அரசமைப்பிலுள்ளவற்றை அமுல்படுத்துவதில் என்னிடம் முரண்பாடான அப்பிராயங்கள் இல்லை, எனது 2019 தேர்தல் விஞ்ஞாபனத்திலும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயம் தொடர்பில் குற்ப்பிட்டிருந்தேன், எனவே என்னை நீங்கள் நம்பலாம்“ – என்று குறிப்பிட்ட, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, “சட்டங்களை அமுல்படுத்தினாலும் கூட, மக்கள் மத்தியில் நிலவும் பரஸ்பர சந்தேங்களை போக்கும் வகையில் நாம் அதிகம் செயற்பட வேண்டியிருக்கின்றது, பரஸ்பர சந்தேகங்களின் காரணமாகவே அரசமைப்பிலுள்ள விடயங்களை அமுல்படுத்துவதில் கூட, நாம் தடைகளை எதிர்கொண்டோம், எனினும், எங்களுடைய ஆட்சி அமையுமானால், நாட்டில் பாரிய மாற்றங்களை நீங்கள் காண்பீர்கள்!“ என்றும் குறிப்பிட்டிருந்தார்.

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடனான சந்திப்பின் போது, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும் பங்குகொண்டிருந்தார்.

மக்கள் மனு – வடக்கு கிழக்கு சிவில் சமூகக் குழு, கடந்த மாதம், மனோ கணேசனைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.- என்று உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 04.04.2024




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்காது. நீங்கள் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கடைபிடிக்க வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே எற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய இறை வழிபாடு மற்றும் பிரார்த்தனையை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காரணமாக அதிருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளுடன் பிரச்சினைகளை சந் திப்பீர்கள்.பணிகள் அதிகம் காணப்படுவதால் ஒய்வு கிடைப்பது அரிது.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும். நிதியைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்க வேண்டும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.




உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைய இன்று கடினமாக உழைக்க வேண்டும். நீங்கள் வெற்றி பெறுவதற்கு தன்னம் பிக்கை அவசியம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் நன்மதிப்பை பெறுவீர்கள். நல்ல பலன் காண பிரார்த் தனை மேற்கொள்ளுங்கள்.

பணிகளைக் கையாளும்போது உங்கள் திறமைகளை வெளிபடுத்துவீர்கள். உங்கள் பணிக்கு தகுந்த அங் கீகாரமும் நன் மதிப்பும் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாகவும் நேரடி யாகவும் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க முடியும்.

நிதிநிலையில் இன்று அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் தன்னம்பிக்கை காரணமாக இன்று நீங்கள் துடிப்புடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். சவால்கள் நிறைந்து காணப்படும் நாள் என்பதால் உங்கள் உணர்வுகளை கட்டுபடுத்த வேண்டும். மனக் குழப்பங்களை நீக்கி தெளிவாக இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

உங்களின் நேர்மறையான உணர்வுகள் காரணமாக உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத் திக் கொள்வீர்கள். இதனால் உறவில் அமைதியும் திருப்தியும் நிலவும்.

அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் கணிசமான தொகை சேர்க்கும் வாய்ப்பும் இன்று குறைவு. இன்று அதிர்ஷ்டமும் உங்களுக்கு சாதகமாக இல்லை.




இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்களிடம் மறைந் திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப் படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணபுழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத் தலாம்.

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் அன்றாட செயல்களில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். பிறரிடம் உரையாடுவதற்கு முன் ஒன்றிற்கு இரண்டு முறை யோசித்து உரையாடுங்கள். பிரார்த் தனை மூலம் உங்களுக்கு மன ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். பொறுமையாக விஷயங் களைக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்கள் துணையிடம் எதிர் மறையான உணர்வுகளை வெளிப்படுத்துவதை தவிர்க்க வும்.

பணபுழக்கம் போதிய அளவில் இருக்காது. உங்கள் நெருங்கிய நபர் ஒருவரின் திடீர் மருத்துவ செலவை சந்திக்க நேரும்.




இன்று நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் உடன் பிறந்தவர்களால் தொல்லையும் பிரச்சினைகளும் ஏற்படும். இன்று அவர்களை தவிர்ப்பது நல்லது.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. கடினமாக உழைத்தாலும் உங்கள் உழைப்புக்கு தகுந்த அங்கீ காரமும் நன்மதிப்பும் கிடைக்காது.

உங்கள் துணையிடம் பேசும் போது அமைதியைக் கடைபிடிக்கவும். சில சமயங்களில் நீங்கள் அமைதி இழக்க நேரலாம். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. பொறுப்புகள் அதிகரிக்கும் காரணத்தால் அதிகம் செலவு செய்ய நேரும்.




இன்று உங்கள் லட்சியங்களை அடைவதற்கு சாதகமான நாள் அல்ல. இன்று கவலையுடன் காணப்படுவீர் கள். இன்று நீங்கள் சமயோசித புத்தி யுடன் செயல்பட வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதில் உறுதியாக இருக்க வேண்டும்.

இன்று அதிகப் பணிகள் காரணமாக சோர்ந்து போவீர்கள். எனவே பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அப்பொழுதான் அதற்குரிய பலன் கிடைக் கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். உறவில் நல்லிணக்கம் பேண இத்தை கைய உணர்ச்சிகளை தவிர்ப்பது நல்லது.

பணப்புழக்கம் அதிகமாக இருக்காது. பணத்தை முடிந்த அளவு சேமிக்க நீங்கள் சிக்கன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.




இன்று நீங்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும். மற்றவர்களுடன் பேசும் போது பாதகமான விளைவுகள் ஏற்படா வண்ணம் வார்த்தைகளை கவனித்துப் பேச வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணியில் குறைந்த அளவு திருப்தியே காணப்படும். தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது.

உங்களின் பதட்டமான மனநிலை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நல்ல புரிந்துணர்விற்கு நட்பான அங்குமுறை வேண்டும்.

இன்று நிதிநிலைமை லாபம் தரும் வகையில் அதிர்ஷ் டகரமாக இருக்காது. தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடு வதன் மூலம் இன்றைய நாளை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளலாம்.

பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 04.04.2024




இன்று உங்களுக்கு விருப்பமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்கு களை குறைந்த முயற்சியில் செய்து முடிப்பீர்கள். புதிய முதலீடுகள் நன்மை அளிக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணியிடத்தில் சுமூகமான பலன்கள் கிடைக்கும். கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப் பீர்கள். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரைந்து செய்து முடிப்பீர்கள்.

உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் உங்கள் துணையிடம் மகிழ்ச்சி காண்பீர்கள்.

இன்று போதிய பண வரவு காணப்படும். உங்கள் குடும்ப அபிவிருத்திக்காக செலவு செய்வீர்கள்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் இருக்காது. உங்கள் மனக் குழப்பமும் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தும். இது உங்களுக்கு பாதகமாக இருக்கும்.

பணியிடத்தில் திருப்திகரமான பலன்கள் காணப்படாது. அதிக வேலை காரணமாக உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை மேற் கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட நேர லாம். எனவே இன்று மகிழ்ச்சியுடன் இருக்க நட்பான உறவை பகிர்ந்து கொள்வது நல்லது.

இன்று பணபுழக்கம் குறைவாக காணப்படும். உங்கள் பொறுப்புகள் அதிகமாக இருக்கும். பணப்பற்றாக்குறை காரணமாக உங்கள் உடனடி தேவைகளை பூர்த்தி செய்ய இயலாது.




இன்று செயல்கள் அனைத்தும் சுமூகமாக நடக்கும். உங்கள் வீட்டில் விருந்தினர் வருகை காரணமாக இன்று நீங்கள் உற்சாகத்துடன் இருப்பீர்கள். அவர்களுடன் சேர்ந்து மகிழும் வாய்ப்பு பெறுவீர்கள். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும்.

உங்கள் கடின உழைப்பின் காரணமாக உங்கள் பணியில் வளர்ச்சி காண்பீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சியான மன நிலையில் இருப்பீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நம்பிக்கை நிறைந்து காணப்படும் நாள். கடின உழைப்புக்கு வெற்றி கிடைக் கும் நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் திருப்தியான சூழல் காணப்படும். கடினமான உழைப்பின் மூலம் நற்பெயரும் அதன் மூலம் நன்மதிப்பும் பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் துணை யுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலையில் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள் வீர்கள். அதிர்ஷ்டம் காரணமாக நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும்.








# பல்கலை மாணவர்களின் போராட்டத்தில் கண்ணீர்ப்புகை, நீர்த்தாரைப் பிரயோகம்

சில பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் நேற்று முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது அவர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

ஹோமாகம ஆதார வைத்திய சாலையை தனியார் பல்கலைக்கழக மொன்றின் பயிற்சிகளுக்காக பயன் படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தைக் கண்டித்தே மாணவர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத் தனர்.

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத் தின் மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய் திருந்த எதிர்ப்புப் பேரணி பல்கலைக் கழகத்திற்கு அருகிலிருந்து விஜேராம சந்தியைச் சென்றடைந்தது.

எனினும், மாணவர்கள் ஹைலெவல் வீதிக்குள் பிரவேசிப்பதற்கு முன்ன தாக பொலிஸார் வீதியை மறித்து நீர்த் தாரை, கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொண்டு பேரணியைக் கலைத் தனர்.

மொரட்டுவை பல்கலைக்கழக மாண வர்கள் மற்றுமொரு எதிர்ப்பு நடவடிக் கையை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையை கலைப்பதற்கும் பொலிஸார் நீர்த்தாரை, கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற் கொண்டனர்.

இதேவேளை, விரைவுரையாளர் கள் பற்றாக்குறை உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து அனு ராதபுரம் பல்கலைக்கழக கல்லூரி மாணவர்களும் எதிர்ப்புப் பேரணி யொன்றை நேற்று முன்னெடுத்த னர்.

அனுராதபுரம் நகர மத்தியில் இருந்து பல்கலைக்கழக கல்லூரிக்கு முன்பாக சென்ற மாணவர்கள் வீதியை மறித்துப் போராட்டம் நடத்தினர்.

## ஐந்நூறு பேரை ஆங்கில ஆசிரியர்களாக சேவையில் இணைப்பதற்குத் தீர்மானம்!



உயர் தொழில்நுட்ப கல்வி டிப்ளோமாவை பூர்த்தி செய்த 500 பேரை ஆங்கில ஆசிரியர்களாக சேவையில் இணைத்துக்கொள்ள கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த ஆள்சேர்ப்பு முன்னெடுக்கப்படும் என அமைச்சுத் தெரிவித்துள்ளது.

தற்போது ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ள தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு அவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.




## 7 நாடுகளின் சுற்றுலா பயணிகளுக்கான விசாக் கட்டண விலக்கு மேலும் நீடிப்பு

ஏழு நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கான விசாக் கட்டண விலக்கு மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் இந்த நடைமுறை அமுலில் இருக்கும் என சுற்றுலா அபிவிருத்தி அதி காரசபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரி வித்துள்ளார்.

இந்தியா, ரஷ்யா, சீனா, இந்தோனேசியா, தாய்லாந்து, ஜப்பான் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் இருந்து நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்கே இந்தச் சந்தர்ப்பம் கிட்டவுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

# துமிந்த நாகமுவ உள்ளிட்ட மூவர் பிணையில் விடுவிப்பு



மக்கள் போராட்ட இயக்கத்தினர் கடந்த 20 ஆம் திகதி முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட துமிந்த நாகமுவ உள்ளிட்ட மூவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள் ளனர்.

கோட்டை நீதிவான் திலின கமகே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப்பிணைகளில் இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

20 ஆம் திகதி முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கையின் போது துமிந்த நாகமுவ உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.